வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் – நாராயணசாமி

தேதி 9.8.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

சகோதரத்துவத்தை வலியுறுத்தும் ரக்ஷாபந்தன் இன்று நாடு முழுவதும் உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது.

வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் 83 ஆவது நினைவு தினம் இன்று அனுசரிக்கப் படுகிறது.

பிரதமர் திரு நரேந்திர மோடி அரசு முறை பயணமாக நாளை ஒரு நாள் கர்நாடகா மாநிலம் செல்கிறார்.

புதுச்சேரியில் உடல் உறுப்புகள் தானத் துறையின் சேவைகளை பாராட்டி மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் திரு ஜே பி நட்டா விருது வழங்கினார்.

ரக்ஷாபந்தன் (13)

சகோதரத்துவத்தை வலியுறுத்தும் ரக்ஷாபந்தன் நாடு முழுவதும் இன்று உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது. குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், சகோதர சகோதரிகளுக்கு இடையே அன்பையும், நம்பிக்கையையும் வலுப்படுத்தும் இந்நாளில் அனைவரும் நாட்டின் கலாச்சார பாரம்பரிய மாண்புகளை மதித்து, மகளிர் உரிமைக்கு குரல் கொடுக்க அழைப்பு விடுத்துள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி, அனைவருக்கும் இனிய ரக்ஷாபந்தன் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொண்டுள்ளார். ஆபரேஷன் சிந்தூர் வெற்றியை பறைசாற்றும் வகையில் அம்ருஸ்டரில் இருந்து

நூற்றுக்கணக்கான ராக்கி கயிறுகள் பிரதமருக்கு அனுப்பி வைக்கப்பட்டன. இதனிடையே, எல்லைப்பகுதிகளில் எல்லைப் பாதுகாப்பு படையினர், மற்றும், மத்திய ரிசர்வ் காவல் படையினருக்கு அப்பகுதிகளை சேர்ந்த மக்கள் ராக்கி கயிறுகளை கட்டி வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

வெள்ளையனே வெளியேறு இயக்கம் 1(7)

வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் 83 ஆவது நினைவு தினத்தை ஒட்டி, அந்த இயக்கத்தில் பங்கேற்று துணிச்சலுடன் செயலாற்றிய அனைவருக்கும் பிரதமர் திரு நரேந்திர மோடி நன்றி தெரிவித்துக்கொண்டுள்ளார். மகாத்மா காந்தியின் சீரிய தலைமையில் தேசபற்றை தூண்டியதன் மூலம் விடுதலைக்கான வேட்கையில் இருந்த எண்ணற்ற மக்களை இந்த இயக்கம் ஒருங்கிணைத்ததாக பிரதமர் புகழாரம் சூட்டினார். ஒத்துழையாமை இயக்கம் குறித்த சில தகவல்கள்……

(வாய்ஸ்)

வெள்ளையனே வெளியேறு இயக்கம் 2 (18)

(வாய்ஸ்)

1942- ஆம் ஆண்டு ஜூலை மாதம் வார்தாவில் கூடிய இந்திய தேசிய காங்கிரஸின் செயற்குழு வெள்ளையனே வெளியேறு இயக்கத்துக்கான வழியைத் தொடங்கியது. 1942- ஆகஸ்ட் 8 ஆம் தேதி மும்பையில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் இந்த இயக்கத்தை முன்னெடுத்துச் செல்லத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மாநாட்டில் பேசிய மகாத்மா காந்தி ‘செய் அல்லது செத்து மடி’ என்ற கோஷத்தை வலியுறுத்தி ‘வெள்ளையனே வெளியேறு’ இயக்கத்தைத் தொடங்கிவைத்தார். ஒத்துழையாமை இயக்கம் எனவும் அழைக்கப்பட்ட இந்த இயக்கம் ஆகஸ்ட் புரட்சி என்றும் அழைக்கப்படுகிறது. “காந்தியடிகள் Quit India என்றுதான் ஆங்கிலத்தில் இதனை குறிப்பிட்டிருந்தார். இந்த இயக்கம் மூலம் நாடு முழுவதும் வேலை நிறுத்தங்களும், பேரணிகளும்

நடத்தப்பட்டன. தொழிலாளர்கள் வேலை செய்ய மறுப்பதன் மூலம் தங்களது ஒற்றுமையை காட்டினர். இந்த இயக்கத்தை அடக்குவதற்காக மகாத்மா காந்தி கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். இரண்டாம் கட்டமாக கிராமப்புறங்களுக்கும் இந்த போராட்டம் பரவியது. வெள்ளையனே வெளியேறு இயக்கம் இந்தியர்களிடையே முழுமையான சுதந்திரத்திற்கான வேட்கையை தூண்டியது. மேலும் இந்தியாவின் சுதந்திரத்திற்கும் வழிவகுத்தது.

*சம்ஸ்கிருத மொழி* (14)

சம்ஸ்கிருத மொழி அறிவுசார் திறமையின் ஆதாரமாக திகழ்கிறது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். உலக சம்ஸ்கிருத மொழி தினம் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி, வாழ்த்து தெரிவித்துள்ள பிரதமர், நாட்டில் கடந்த 10 ஆண்டுகளில் சம்ஸ்கிருத மொழியை பிரபலப் படுத்தவதற்கான பல்வேறு நடவடிக்கைகளை தமது தலைமையிலான அரசு மேற்கொண்டுள்ளதாக எடுத்துரைத்தார். மற்றொரு பகுதியாக, சம்ஸ்கிருத பிரதிகளை மின்னணு மயமாக்கும் முயற்சிகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளதாக குறிப்பிட்டார். மத்திய சம்ஸ்கிருத பல்கலைக் கழகங்கள் மற்றும் கற்றல் மையங்கள், சம்ஸ்கிருத மொழியாளர்களுக்கான சலுகைகள் போன்ற அரசின் முயற்சிகளையும் பிரதமர் சுட்டிக் காட்டினார். இந்நடவடிக்கைகளால் எண்ணற்ற மாணவர்களும், ஆராய்ச்சியாளர்களும் பயனடைவதாக அவர் மகிழ்ச்சி தெரிவித்தார். சம்ஸ்கிருத மொழியை பிரபலப்படுத்தும் அனைத்து தரப்பினரின் முயற்சிகளை இந்நாளில் பாராட்டுவதாக அவர் குறிப்பிட்டார்.

*மோடி – கர்நாடகா* 1 (2)

பிரதமர் திரு நரேந்திர மோடி அரசு முறை பயணமாக நாளை ஒரு நாள் கர்நாடகா மாநிலம் செல்கிறார். பிரதமரின் இந்த பயணம் குறித்த கூடுதல் விவரங்கள்……

(வாய்ஸ்)

மோடி – கர்நாடகா 2 (14)

வாய்ஸ்

பிரதமர் திரு நரேந்திர மோடியின் கர்நாடக பயணத்தின் போது பெங்களூருவில் உள்ள கே எஸ் ஆர் ரயில் நிலையத்தில் 3 வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் ரயில்களை அவர் கொடியசைத்து தொடக்கி வைக்கிறார். பெங்களூருவில் இருந்து பெலக்காவி, அம்ருதரஸ்-ஶ்ரீ மாதா வைஷ்ணவ் தேவி கட்ரா மற்றும் நாக்பூர் – புனே வரையிலான ரயில்கள் இதில் அடங்கும். தொடர்ந்து, பெங்களூரு மெட்ரோவின் மஞ்சள் வழித்தடத்தையும் அவர் கொடியசைத்து தொடக்கி வைக்க உள்ளார். ஆர் வி சாலை, ராக்கி குடாவில் இருந்து எலக்ட்ரானிக்ஸ் சிட்டி மெட்ரோ நிலையம் வரை அவர் மெட்ரோ ரயிலில் பயணிக்க உள்ளார். பெங்களூருவில் நகர்புற இணைப்பு திட்டங்களுக்கும் பிரதமர் அடிக்கல் நாட்ட உள்ளார். தொடர்ந்து நடைபெறும் பொது நிகழ்ச்சியிலும் அவர் மக்களுடன் உரையாற்றுகிறார். 15 ஆயிரத்து 610 கோடி ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள பெங்களூரு மெட்ரோவில் 3 ஆம் கட்ட திட்டத்திற்கும் இந்த பயணத்தின் போது, அவர் அடிக்கல் நாட்டுகிறார்.

பிரதமர் ககோரி (9)

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று ககோரி சம்பவத்தின் புரட்சியாளர்களுக்கு அஞ்சலி செலுத்தினார். நூறு ஆண்டுகளுக்கு முன்பு இதே நாளில் ககோரியில் தேசபக்தி உள்ள இந்தியர்கள் காட்டிய துணிச்சல், காலனித்துவ ஆட்சிக்கு எதிரான மக்களின் அதிருப்தியை எடுத்துக்காட்டுகிறது என்று தனது சமூக ஊடகப்பதிவில் குறிப்பிட்டுள்ளார். புரட்சியாளர்களின் வீரம் இந்திய மக்களால் எப்போதும் நினைவில் கொள்ளப்படும் என்றும், வலுவான மற்றும் வளமான இந்தியாவை நோக்கிய அவர்களது கனவுகளை நிறைவேற்ற அரசு தொடர்ந்து பாடுபடும் என்றும் அவர் பதிவிட்டுள்ளார்.

*ராஜ்நாத் சிங்* (9)

தேசிய ராணுவ தளவாட உற்பத்தி இதுவரை இல்லாத அளவாக சென்ற நிதியாண்டில் 1 லட்சத்து 51 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு உயர்ந்துள்ளதாக பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத சிங் பெருமிதம் தெரிவித்துள்ளார். முந்தைய ஆண்டைக் காட்டிலும், இது 18 சதவிகிதம் அதிகம் என்றும் தமது சமூக வலைத்தள பதிவில் அவர் சுட்டிக் காட்டி உள்ளார். இந்த சாதனை வளர்ச்சிக்கு நாட்டின் ராணுவ தளவாட தொழிற்சாலை கட்டமைப்பை அரசு வலுப்படுத்தியதே காரணம் என்றும் அவர் எடுத்துரைத்தார். பாதுகாப்பு அமைச்சகத்தின் ராணுவ உற்பத்தி பிரிவின் இதர பங்குதாரர்களையும் அமைச்சர் பாராட்டி உள்ளார்.

*அஸ்வினி வைஷ்ணவ்* (7)

பிரதமரின் உஜ்வாலா திட்டத்தின் கீழ், சமையல் எரிவாயு நுகர்வோர்களுக்கு நடப்பு நிதியாண்டின் மானியம் வழங்குவதற்காக 12 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தற்போது 10 கோடியே 33 லட்சம் குடும்பங்கள் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்து வரும் நிலையில், ஆண்டொன்றுக்கு 9 சிலிண்டர்களுக்கு தலா 300 ரூபாய் மானியம் வழங்கப்படும் என்றார்.

*புதுச்சேரி – விருது* (16)

புதுச்சேரியில் உடல் உறுப்புகள் தானத் துறையின் சேவைகளை பாராட்டி மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் திரு ஜே பி நட்டா விருது வழங்கினார். கடந்த ஆண்டு புதுச்சேரியில் இறந்த 6 கொடையாளிகளிடம் இருந்து உறுப்புகள் பெறப்பட்டு 19 நோயாளிகளுக்கு மாற்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. 54 உயிருள்ள உறுப்பு தானங்கள் புதுச்சேரி மாநில உறுப்பு மற்றும் திசு மாற்று அமைப்பின் கீழ் உள்ள மாற்று மருத்துவமனைகளில் செய்யப்பட்டது. இந்த உறுப்பு தான துறையின்

சேவைகளை பாராட்டி புதுடெல்லியில் கடந்த 2 ஆம் தேதி நடைபெற்ற 15 ஆவது இந்திய உறுப்பு தான தின நிகழ்ச்சியில், புதுச்சேரி பிரதேசத்திற்கான சிறந்த யுடி விருதை மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜே பி நட்டா வழங்கினார். இந்த விருதை புதுச்சேரி அரசு சார்பில் உறுப்பு மற்றும் திசு மாற்று அமைப்பின் சிறு நீரகவியல் மற்றும் நோடல் அதிகாரி தலைவர் திரு குமார் பெற்றார். தொடர்ந்து சுகாதார மற்றும் குடும்ப நல சேவைகள் இயக்குநர் மற்றும் குழுவினர், புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு ரங்கசாமி மற்றும் சுகாதார செயலாளர் திரு செவ்வேள் ஆகியோரை சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

*ரயில்வே (8)*

ரயில் பயணங்களில் ஒரு இடத்திற்கு சென்று திரும்புவதற்காக இரு மார்க்கங்களிலும் பயண சீட்டை முன்பதிவு செய்யும் பயணிகளுக்கு திரும்பி வரும் கட்டணத்தில் 20 சதவிகித தள்ளுபடி வழங்கப்படும் என்று ரயில்வேத் துறை அறிவித்துள்ளது. இந்த பயணச் சீட்டை ரத்து செய்தால் ரயில் கட்டணத் தொகை திருப்பி வழங்கப்பட மாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக வரும் அக்டோபர் 13 ஆம் தேதி பயணத்திற்காக வரும் 14 ஆம் தேதியில் இருந்து முன்பதிவு செய்யும் பயணிகளுக்கு இந்த தள்ளுபடி சலுகை நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

*விளையாட்டு (7)*

ஆஸ்திரேலியாவில் நடைபெறும் சர்வதேச டென்னிஸ் மகளிர் இரட்டையர் அரையிறுதி போட்டியில் இந்தியாவின் ரியா பாட்டியா, செக் குடியரசின் பாயர்லோவா இணை – ஸ்லோவேனியாவின் டேலிலா, நிக்கா இணையை இன்று எதிர்கொள்கிறது.

மகாபலிபுரத்தில் நடைபெறும் ஆடவர் ஆசிய அலைச்சறுக்கு சாம்பியன் பட்ட போட்டியின் இறுதி ஆட்டத்திற்கு இந்தியாவின் ரமேஷ் புதிஹால் மற்றும் கிஷோர்குமார் ஆகியோர்முன்னேறி உள்ளனர்.

வளிமண்டல கீழடுக்கு மற்றும் மேலடுக்கு சுழற்சிகள் காரணமாக, இன்றைய தினம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, வேலூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர், நாகை, திருவாரூர் உள்ளிட்ட மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாக, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வரும் 14ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது. சூறாவளிக் காற்றுக்கு வாய்ப்பு அதிகம் உள்ள தமிழக கடலோரப் பகுதிகள், வங்கக் கடல் பகுதிகள், மற்றும், அரபிக் கடல் பகுதிகளுக்கு, மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர். இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக, ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு உள்ளிட்ட இடங்களில், 9 செ.மீ மழை பதிவாகி உள்ளது.